**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 03/2009**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ**.**சா**.6**
**Defence**
**Court**

**Name** **:** **பசுலுதீன்**

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 07.12.2022

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசியில் வாலியன்பொத்தையில் குடியிருக்கிறேன். நான் வாட்ச் ரிப்பேர் செய்யும் தொழில் செய்து வருகிறேன். வழக்கில் புகார் கொடுத்த அலாவுதீன் என்பவரை தற்போதுதான் தெரியும். நான் எந்த கட்சியிலும் உறுப்பினராக இல்லை. வழக்கு சம்பந்தமாக அலாவுதீன் கொடுத்த புகார் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர்

எதிரிகளை தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை. அபுஅயூப் அன்சாரி, சைய்யது அலி , பசலுதீன், மசூது, மொசாக் என்ற முகமது இஸ்மாயில் , ஜாபர்ஜாதிக், சுபகான், ஆகியோரை வழக்கிற்கு பின்னர் தெரியும். சம்பவத்தில் எனக்கு தெரிந்த யாரும் இறக்கவில்லை. **TN** 76**B** 9529 என்ற ஆட்டோ யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரித்தபோது நான் தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக்கழகத்தில் உறுப்பினராக இருந்து வருகிறேன் என்றும் எங்கள் கட்சியை சேர்ந்தவர்கள் உட்பட பலரும் தென்காசி அம்மன் சன்னதி தொழுகை பள்ளி வாசலை புதிதாக எடுத்து கட்ட நாங்கள் ஏற்பாடு செய்துகொண்டிருந்தபோது தென்காசி இந்து முன்னனி தலைவர் குமார் பாண்டியன் அதற்கு தடையாக இருந்து வந்ததாகவும், அதன் தொடர்ச்சியாக 2006 ம் ஆண்டு டிசம்பர் 6 ம் தேதி பாபர் மசூதி இடிக்கப்பட்ட தினத்தை நாங்கள் கருப்பு தினமாக அனுசரித்தபோது இந்து முன்னனி தலைவர் குமார்பாண்டியன் இந்து எழுச்சி நாளாக அறிவித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியதாகவும் அதனால் அதற்கு நடவடிக்கை எடுக்க பள்ளிவாசலை சேர்ந்த நபர்களும் நாங்களும் ஆலோசனை செய்தோம் என்றும் அதன் தொடர்ச்சியாக 17.12.2006 ம் தேதி குமார் பாண்டியனை எங்களது தரப்பை சேர்ந்த ஹனிபா, அப்துல்லா ஆகியோரை செய்யது

சுலைமான் கொலை செய்தனர் என்றும் அவ்வாறு கொலை செய்ததற்கு பழியாக இந்து அமைப்பை சேர்ந்தவர்கள் தமுமுக தலைவர் மைதீன் சேட்கானை வெட்டி கொலை செய்ய முயற்சித்து வந்தனர் என்றும் இந்நிலையில் ஹனிபாவும், அப்துல்லாவும் பிணையில் வெளிவந்துவிட்டார்கள் என்றும் அவர்கள் மகளிர் காவல் நிலையத்தில் கையொப்பம் இட சென்றபோது அவர்களுக்கு பாதுகாப்பாக ஆட்டோவில் சிலர் சென்று வருவார்கள் என்றும் போலீசர் விசாரனையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 14.08.2007 தேதி காலை 10.15 மணிக்கு நானும் மேசாக் , மசூது, சம்சுதீன் நண்பர்கள் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் விடிஎஸ் குடோன் இருக்கும் சந்தின் அருகில் நின்று கொண்டிருந்தபோது நிபந்தனை கையொப்பம் போட்டுவிட்டு இருசக்கரவாகனம் மற்றும் ஆட்டோக்களில் நாங்கள் திரும்ப வந்துகொண்டிருநதபோது மீரான் மைதீன் மகன் அலாவுதீன் TN 72 x0558 என்ற யமஹாபைக்கிலும் TN 76B 4529, TN 76B 4974 என்ற ஆட்டோக்களில் நானும் அபுஅயூப்அன்சாரி , செய்யது அலி, முருகேசன் என்ற அப்துல்லாவும், முகமது பசீர் அசன்கனி, நாகூர்மீரான், மசூது, மோசாக் என்ற இஸ்மாயில் மற்றும் சிலரும் சுமார் 10.15 மணியளவில் தென்காசி எல்.ஆர்.எஸ்.பாளையம் கூலக்கடை பஜாரை கடந்து மவுண்ட் ரோடு என்ற பகுதியில் கிழக்கு நோக்கி சென்றுகொண்டிருநதபோது முத்தாலம்மன் கோவில் அருகில் TN 72 Z 9757 என்ற வெள்ளை நிற அம்பாசிடர்காரை குமார்பாண்டியனின் சகோதரர்ககள் செந்தில், சக்தி பாண்டியன், கபிலன், சுப்பிரமணியன், சுரேந்திரன் ஆகியோர் முன்னால் சென்ற யமாகா பைக்கின் மீது மோதி நாங்கள் சென்ற வழியை மறித்து அரிவாளுடன் காரில் இருந்து இறங்கி வெட்டுங்கள், கொல்லுங்கள் என்று சக்தி பாண்டியன் கூற மற்றவர்களும் ஓடிவந்தனர் என்றும் உடன் வந்தவர்கள்

அங்கிருந்து மேற்காக ஓடியபோது முத்து டீக்கடை அருகில் இருந்த சேகர், மலையப்பன், தட்சணாமூர்த்தி, குட்டிமணி, சுரேஷ், பிஸ்தாமணி, சக்தி, கேபிள் டிவி முத்து, ஆட்டோ ரமேஷ், தங்கதுரை அலெக்சாண்டர், இளநீர்கண்ணன், ஆகியோரும் அவர்களை சுற்றி வளைத்து தாக்கினார்கள் என்றும் அப்போது சுரேஷ் அரிவாளால் சையது அலியை கழுத்தின் வலது பக்கம் மாறி மாறி வெட்டினார் என்றும் அபுஅயூப்அன்சாரி என்பவரை குட்டிமணி என்பவர் அரிவாளால் முதுகில் மாறிமாறி வெட்டினார் என்றும் கேபிள் டிவி முத்து அலாவுதீனின் தலையிலும், என் வலது மார்பிலும் மாறி மாறி வெட்டினார் என்றும் சுரேஷ் அரிவாளால் முகமது பசீர் மற்றும் என்னை மாறி மாறி வெட்டினார் என்றும், தங்கதுரை ராஜாமுகம்மதுவை வெட்டினார் என்றும் அலெக்சாண்டர் அரிவாளால் நாகூர் மீரான் அசன்கனி ஆகியோர்களை வெட்டினார் என்றும் சக்தி பாண்டியன் முகமது பசீரின் தலையில் மாறி மாறி வெட்டினார் என்றும் சுரேந்திரன் அரிவாளார் முகம்மது பசீரின் தலையிலும் அசன்கனியின் வலது விலா மற்றம் தொடை பகுதியில் வெட்டினார் என்றும் மலையான் தெருவை சேர்ந்த சண்முகம் இருப்பு பட்டையால் அப்துல்லாவின் முகத்திலும் தலையிலும் மாறி மாறி அடித்தார் என்றும் செந்தில் அரிவாளால் அசன்கனியை வெட்டினார் என்றும் பிஸ்தாமணி என்பவரும் அரிவாளால் அசன் கனி, மற்றும் முகம்மது பசீர் ஆகியோர்களை வெட்டினார் என்றும் சேகர் அரிவாளால் அசன்கனியை மாறி மாறி வெட்டினார் என்றும் இதனால் காயம் பட்டவர்களை நானும் மேசாத் மசூது ஆகியோரும் TN 76B 4529 என்ற ஆட்டோவில் அவர்களை ஏற்றிக்கொண்டு கன்னிமார் தெருவில் உள்ள ஒரு சந்தில் மறைவாக இருக்கும் படி விட்டுவிட்டு நாங்களும் அங்கே மறைந்துகொண்டோம் என்றும் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த சம்பவத்தில் அபுஅயூப்அன்சாரி,

சையது அலி, அலாவுதீன், முருகேசன் என்ற அப்துல்லா, இராஜாமுக்கமது, நவாஸ், ஹனிபா ஆகியோர்களுக்கும் வெட்டுக்காயங்கள் ஏற்பட்டது என்றும் போலீசார் விசாரித்தபோது கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த சம்பவம் பற்றி அறிந்து தமுமுக ஆம்புலன்சில் காயம் பட்டவர்களை சிகிச்சைக்கு ஏற்றிக்கொண்டு திருநெல்வேலி ஹகிரவுண்ட் மருத்துவனைக்கு எடுத்து சென்றார்கள் என்றும் காவல் துணை கண்காணிப்பாளர் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சக்திபாண்டியன் வகையறா எங்கள் மீது கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வழக்கில் எதிரியாக இந்நீதிமன்றம் ஆஜராகி வருகிறேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் பகுதியாக விசாரணை நடைபெற்று நிலுவையில் உள்ளது. அந்த வழக்கில் இவ்வழக்கின் ஆஜர் எதிரிகள் சிலர் சாட்சியாக உள்ளனர் என்றால் சரிதான். அவர்கள் எங்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பு வழக்கில் பிறழ்சாட்சியாக உள்ளனர் என்றால் எங்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்கவில்லை. எங்களுக்குள் ஏற்பட்ட ரகசிய உடன்படிக்கையின் படி எங்கள் வழக்கில் இருந்து நாங்கள் தப்பிக்கவும் எதிரிகள் மீதான வழக்கில் இருந்து அவர்கள் தப்பிக்கவும் போலீசார் விசாரணையின் போது கூறிய விபரங்களை மறைத்தும் எனக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றிய விபரங்களை மறைத்தும் சம்பவம் நடந்தபோது

நான் சம்பவ இடத்தில் இருந்த விபரங்களை மறைத்தும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**